# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 10.02.2026

அசல் வழக்கு எண். 98/2014

வா.சா. 1. – சங்கர் , த/பெ. கிருஷ்டப்ப நாயக்கர்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நாராயணசாமி நாயக்கர் உங்கள் பாட்டனார் என்று சொன்னீர்கள் அது சரியா என்றால் சின்னப்ப நாயக்கர் தான் என்னுடைய பாட்டனார் ஆவார் நாராயணசாமி நாயக்கர் என்பவர் சின்னப்ப நாயக்கர் என்பவரது தகப்பனார் ஆவார் அதாவது கொள்ளு தாத்தா ஆவார். எதற்காக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சொத்து எனக்கு கொடுக்கவில்லை ஆகவே வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் சின்னப்ப நாயக்கர் என்பவருக்கு சொந்தமான சொத்தாகும். மேற்படி சொத்துக்களை சின்னப்ப நாயக்கர் கிரயம் வாங்கினாரா என்றால் கிரயம் வாங்கினார். சின்னப்ப நாயக்கர் தான் கிரயம் வாங்கினார் என்று கூறும் நீங்கள் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. சின்னப்ப நாயக்கருக்கு உடன் பிறந்தவர்கள் யார் என்றால் 1. முனுசாமி நாயக்கர், 2.சின்னப்ப நாயக்கர், 3.சாமிக்கண்ணு நாயக்கர், 4. ராஜகோபால் நாயக்கர் ஆகிய நான்கு பேர் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். மேற்படி நான்கு பேரும் கடந்த 25.06.1966 அன்று பாகம் பிரித்துக் கொண்டு ஒரு கூர் சீட்டு எழுதிக் கொண்டார்கள் அது பற்றி தெரியுமா என்றால் தெரியும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் தான். முனுசாமி நாயக்கர் சொத்தில் நீங்கள் எதுவும் உரிமை கோரவில்லை என்றால் சரிதான் அவருடைய சுவிகாரக் குமாரன் வேலாயுதம் அடைந்து விட்டார் என்றால் சரிதான். சின்னப்ப நாயக்கர் வழக்கு சொத்தினை

வாங்கியதாக சொல்கிறார்கள் அதனை எதன் அடிப்படையில் நீங்கள் உரிமை கோருகிறீர்கள் என்றால் எனக்கு அவர் உயில் மூலமாக கொடுத்தார் அதன் அடிப்படையில் கேட்கிறேன். உங்கள் தாத்தா சின்னப்ப நாயக்கர் உயில் எழுதியதாக சொல்கிறீர்கள் எந்த தேதியில் எழுதினார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. உயில் நீங்கள் படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்க்கவில்லை. உங்களுக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது நான் சுத்தமாக படிக்கவில்லை. முதல் வாதி உங்கள் சகோதரர் பொன்னுரங்கம் என்பவருக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும் அவர் என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது அவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது வழக்கறிஞராக இருந்து வருகிறார் என்பது மட்டும் தெரியும் என்ன படித்தார் என்று எனக்கு தெரியாது. இரண்டாவது வாதி சீனிவாசன் நன்கு படித்தவர் என்றால் சரிதான். அவர் பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். முதல் வாதி மற்றும் இரண்டாவது வாதி நன்கு படித்தவர்கள் அவர்கள் சாட்சியம் அளிக்க வராமல் உங்களை அனுப்பியதற்கான உள்நோக்கம் என்ன என்றால் என்னுடைய சொத்து என்பதால் நான் சாட்சியம் முடிக்க வந்துள்ளேன். முதல் மற்றும் இரண்டு வாதிகள் நல்ல முறையில் பேச்சுவார்த்தையில் இருக்கிறீர்கள் என்றால் அப்படி இருக்கும் பட்சத்தில் ஏன் அவர்களை சாட்சியம் அளிக்க அழைக்கவில்லை என்றால் அவர்கள் வர முடியவில்லை போக முடியவில்லை என்பதால் என்னை பார்த்துக் சொல்லி அனுப்பி விட்டார்கள். முதல் மற்றும் இரண்டாவது வாதிகள் திருமணம், திருவிழா போன்ற காலத்தில் வந்து பங்கு பெறுகிறார்கள்

என்றால் சரிதான். மற்ற வழக்குகள் எதற்காக நடத்துகிறீர்கள் என்றால் வேலாயுதம் என்பவர் என்னை கேட்காமலேயே அளக்காமலேயே சுவரை இடித்து விட்டார் அவர் செய்தது தவறு என்பதால் மற்ற வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். அதனுடைய சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மற்ற வழக்குகளில் உள்ள சொத்துக்களின் பரப்பளவு, சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை, தெரியாது. உங்களுக்கு எழுத படிக்கத் தெரியாது என்று கூறுகிறீர்கள் வழக்கறிஞரை பார்த்து யார் விவரங்களை கொடுத்தார் என்றால் நான் சிட்டா அடங்கலை பார்த்து வழக்கறிஞருக்கு விவரங்களை சொன்னேன். உங்களுக்கு வழக்கு விபரங்கள் தெரியாது முதல் மற்றும் இரண்டாவது வாதியை விசாரித்தால்தான் விவரங்கள் தெரியும் என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் 1973 ஆம் ஆண்டு உங்கள் தாத்தா உயில் எழுதியதாக சொல்கிறீர்கள் அதனை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் அசல் உயில் வேலாயுதம் எடுத்து வைத்துக் கொண்டு கொடுக்க மறுக்கிறார். அசல் உயில் வேலாயுதம் எடுத்துச் சென்று விட்டார் என்கிற விவரம் ஏன் வழக்கில் வாக்குமூலத்திற்கு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 1973 ஆம் ஆண்டு உயிலின்படி யார் யாருக்கு சொத்துக் கொடுக்கப்பட்டது என்றால் பொன்னுரங்கம், சீனிவாசன், சங்கர், ஏழுமலை, கோவிந்த நாயக்கர், சரவணன் ஆகியோருக்கு சொத்துக் கொடுத்துள்ளார். முதல் பிரதிவாதி வேலாயுதம் என்பவருக்கு உயில் மூலமாக சொத்து கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. வா.சா.ஆ 1ல் ஏ ஷெடுல் சொத்துக்கள் வேலாயுதம், தசரதன், சரவணன் இவர்கள் அனைவரும் சமமாக பாகம் அடைய

வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் உங்களுக்கு படிக்கத் தெரியாது என்று சொல்லிவிட்டீர்கள் யார் படித்து சொன்னது என்றால் பொன்னுரங்கம் என்பவர்தான் படித்து சொன்னார். பொன்னுரங்கம் சொல்லி தான் இந்த வழக்கு தாக்கல் செய்தீர்கள் உங்களுக்கு நேரடியாக விவரம் தெரியாது என்று சொன்னால் சரி இல்லை. வாதிகள் தவிர மற்ற பயனாளிகள் உயில் குறித்து வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. மற்ற சொத்துக்கள் என்ன ஆனது என்றால் வேலாயுதமும் மற்றவர்களும் சேர்ந்து விற்பனை செய்து விட்டார்கள் எனக்கு படிப்பறிவு இல்லை என்பதால் எனக்கு எதுவும் கொடுக்கவில்லை. நீங்களும் உங்கள் தாயார் பாப்பாத்தி அம்மாள் சகோதரி கஸ்தூரி ஆகியோர் மூவரும் சேர்ந்து கொண்டு ஒரு சொத்து விற்பனை செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண், பரப்பளவு சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. எந்த அடிப்படையில் சொத்து விற்பனை செய்தீர்கள் உயிலின் அடிப்படையில் விற்பனை செய்தீர்களா அல்லது வேறு ஏதேனும் விற்பனை செய்தீர்களா என்றால் உயில் முன்னிலைக்கு தான் விற்பனை செய்தோம். சின்னப்ப நாயக்கர் அவர்களின் குமாரர்கள் மேற்படி உயிலை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களுக்கு இடையே ஒரு பாகப்பிரிவினை கூர்சீட்டு 1976ஆம் ஆண்டு எழுதிக் கொண்டார்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை கூர்சீட்டு எழுதப்பட்ட விவரங்கள் உங்கள் சகோதரர் அல்லது உங்கள் தாயார் உங்களிடம் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். கூர்சீட்டு எழுதிய விவரம் யார் சொன்னது என்றால் வேலாயுதம் சொன்னார். கூர்சீட்டு எழுதியதை பற்றி உங்கள் அம்மா

சொன்னார்களா என்றால் சொன்னார்கள். 1976 கூர்சீட்டு எழுதப்பட்ட காலகட்டத்தில் உங்கள் சகோதரர் மைனர்களாக இருந்தார்களா மேஜராக இருந்தார்களா என்று காட்டுவதற்கு நீங்கள் வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரி இல்லை. உயில் அமலுக்கு வரவில்லை கூர்சீட்டின் அடிப்படையில் தான் சொத்து ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் தெரியாது. கடந்த 1976 ஆண்டு கூர்சீட்டின் அடிப்படையில் உங்கள் குடும்பத்திற்குள் கடந்த 1986ல் ஒரு கூர் சீட்டு எழுதப்பட்டது என்றால் சரியில்லை. எனக்கு சுத்தமாக தெரியாது. கூர் சீட்டு பற்றி உங்களுக்கு தெரியாது என்று சொல்லிவிட்டீர்கள் பின்னர் எதன் அடிப்படையில் அதெல்லாம் தவறு என்று கூறுகிறீர்கள் என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.